பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 05 சனிக்கிழமை 19.03.2022 கதிர் 134

### இது ரகசியம் அல்ல!

இலங்கை அரசியல் பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கத் தலையீடு அல்லது பங்களிப்புக் குறித்து இப்பத்தியில் இரண்டு, மூன்று தடவைகள் ஒரே விடயத்தைச் சுட்டிக் காட்டி இருக்கின்றேன். அது சரித்திரம் திரும்புகின்றது என்பது தான்.

☞ 2

# பட்டினியால் வாடும் மக்கள் எங்களைத் திட்டுகின்றனர்; கோட்டா நடவடிக்கை எடுக்காவிடின் அரசுக்கு 'குட்பாய்'

## ஆளுங்கட்சி எம்.பி. லலித் எல்லாவல பகிரங்க எச்சரிக்கை



நாட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். அவர்கள் கண்டபடி எங்களைத் திட்டுகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்து, இது தொடர்பில் முறையிடவுள்ளோம். அவர் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் அரசுக்குக் 'குட்பாய்' சொல்லுவோம்.

- இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான லலித் எல்லாவல.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்துள்ளேன். அப்போது மக்கள் என்னைத் திட்டவில்லை. தற்போது

☞ 10

# ஜனாதிபதி செயலகம் நேற்றும் சுற்றிவளைப்பு

## சோசலிச இளைஞர் முன்னணியினரின் ஆர்ப்பாட்டத்தால் முடங்கியது கொழும்பு

'நாட்டின் எரிபொருள் கியூவை முடிவுக்குக் கொண்டு வருவோம்' எனும் தொனிப்பொருளில் சோசலிச இளைஞர் முன்னணி (ஜே.வி.பி.ஆதரவு ஆணி) நேற்று முற்பகல் கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் இறுதியில் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டுக் கோஷம் எழுப்பினர்.

☞ 2



# பிரதமர் இன்று யாழ். விஜயம்

## பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இதன்போது யாழில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகளில் அவர்

☞ 9

# இந்தியா வழங்கிய கடனால் பொருள்களுக்கு தட்டுப்பாடின்றி புத்தாண்டை கொண்டாடலாம்

## நாடு திரும்பிய பஸில் இப்படிக் கருத்து

மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வாங்குவதற்கு இந்தியாவால் ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்கப்பட்டுள்ளது. எனவே, புத்தாண்டு காலத்தில் எவ்வித தடையுமின்றி அத்தியாவசியப் பொருள்களை மக்களுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது இந்தியப் பயணத்தை நிறைவு செய்து நேற்றுப் பிற்பகல் நாடு திரும்பினார்.

அமைச்சரின்

☞ 9



# தாய்ப் பால் புரைக்கேறி 8 மாதக் குழந்தை சாவு!

(ந.லோகதயாளன்)

தாய்ப்பால் அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்ற 8 மாதப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது. பால் புரைக்கேறியமையே உயிரிழப்புக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுக்கோட்டை, அராலி வடக்கைச் சேர்ந்த யோகசீலன் கிருத்திகா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை தாய்ப்பால் அருந்திவிட்டு உறங்கிய குழந்தை அதிகாலை 4.30 மணியளவில் அசைவற்றுக் காணப்பட்டுள்ளது.

குழந்தை உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட

☞ 9

# சிறைக் கைதி தப்பியோட்டம்; பொலிஸார் தேடுதல் வேட்டை

(வவுனியா நிருபர்)

வவுனியா, மார்ச் 19

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று அதிகாலை தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள வீடுகளில் திருட்டில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று அதிகாலை சிறைச்சாலையிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்ற இந்தக் கைதியைத் தேடி வவுனியா சிறைக்காவலர்கள், வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிளிநொச்சியில் சூழல் காற்றால் 10 வீடுகள் சேதம்

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சியில் வீசிய திடீர் சுழற் காற்றால் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் ஒரு ஓட்டோவும் சேதமடைந்துள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கிருஸ்ணபுரம், செல்வாநகர்ப் பகுதிகளில் நேற்று மாலை திடீரென மழையுடன் கூடிய சுழற் காற்று வீசியது. இதன்போது இரு கிராமங்களிலும் 10 வீடுகளின்

☞ 9

# கைதான ஆறு தமிழக மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

(ந.லோகதயாளன்)

தமிழக மீனவர்களுக்கு ஓராண்டு சிறைத்தண்டனை விதித்து, அதனை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து ஊர்காவற்துறை நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

தமிழ்நாடு – இராமநாதபுரம் மாவட்டம், நம்புதாளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து நாட்டுப்படகில் மீன்பிடிக்கச் சென்ற 6 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்து ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில்

☞ 2

# ஒன்பது மாதக் குழந்தை காய்ச்சலால் உயிரிழப்பு

(ந.லோகதயாளன்)

ஒரு நாள் காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக ஒன்பது மாதப் பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அமலதாஸ் டேம்ஸ்யான் சிகா என்னும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

குழந்தைக்கு நேற்றுமுன்தினம் இரவு காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து

☞ 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2011 – 2012ஆம் ஆண்டுகளில் என்ன நடந்ததோ, அது அச்செட்டாக 2021 – 2022 இலும், சரியாக பத்து ஆண்டுகள் கடந்து நடைபெறுவது பற்றித்தான் குறிப்பிட்டிருந்தேன்.

2011 நவம்பரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் – சம்பந்தன், சுமந்திரன், மாவை, சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகிய நால்வரும் – வொஷிங்டன் சென்றார்கள். அங்கு இலங்கை விவகாரத்தைக் கையாளும் அமெரிக்க உயரதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினர்.

அதன் பின்னர், அமெரிக்கத் தரப்பில் இலங்கை தொடர்பான அரசியல் நிலைப்பாடு, கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட்டது.

அதன் பின்னர் 2012 முற்பகுதியில் அமெரிக்க உயர்மட்டக் குழு ஒன்று கொழும்புக்கு வந்தது. அந்தக் குழு கொழும்பில் தனது பேச்சுகளின் போது, இலங்கையில் யுத்த வேளையில் இடம் பெற்ற குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை நிலைநாட்ட வேண்டும் என்ற தனது நாட்டின் புதிய கொள்கை நிலைப்பாட்டை அப்போது வெளிப்படுத்தியது. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்த விடயத்தை நகர்த்தும் அமெரிக்காவின் கொள்கை முடிவு அப்போதுதான் வெளிப்படுத்தப்பட்டது.

அதேபோல சரியாகப் பத்து ஆண்டுகள் கழித்து 2021 நவம்பரில் தமிழ்க் கூட்டமைப்பின் உயர்குழு ஒன்று வொஷிங்டன் சென்றது. அந்தக் குழுவில் கூட்டமைப்பின் சட்ட நிபுணர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரன், சட்ட நிபுணர் நிர்மலா சந்திரகாசன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அவர்களுடன் சேர்ந்து இம்முறை உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளும் அமெரிக்கத் தரப்புடன் பேச்சுகளில் ஈடுபட்டனர்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான விடயங்கள் தொடர்பிலேயே தமிழர் தரப்பின் சட்ட நிபுணர்களும், பிரதிநிதிகளும் அமெரிக்க அதிகாரிகளுடன் பேசினர்.

அதையடுத்து முன்னரைப் போல – 2012 பெப்ரவரியில் நடந்தமை போல – இப்போது 2022 மார்ச்சிலும் – அமெரிக்க அதிகாரிகள் குழு கொழும்பு வருகின்றது.

2012 இல் எந்தப் பதவி நிலை அதிகாரிகள் இலங்கை வந்து, இலங்கை தொடர்பான அமெரிக்கக் கொள்கை நிலைப்பாட்டில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் விடயத்தை வலியுறுத்தும் அம்சம் இடம்பெற்றுள்ளது என்பதை வெளிப்படுத்தினரோ, அதே பதவி நிலை அதிகாரிகள்தான் இப்போது இந்த வாரத்தில் அமெரிக்காவில் இருந்து கொழும்பு வருகின்றார்கள்.

2012 இல் அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் மரியா ஒட்டாரோ அம்மையாரும், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கும் அடங்கிய அமெரிக்கக் குழுவே இலங்கை வந்தது.

அதேபோல சரியாக பத்து ஆண்டுகள் கழித்து 2022 மார்ச்சில் வரும் அமெரிக்கக் குழுவில் அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் விக்டோரியா நுலண்ட் அம்மையாரும், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் டொனால்ட் லுவும் அடங்குகின்றனர்.

2012இல் வந்த மரியா ஒட்டாரோ அம்மையாரின் பதவி நிலையில் இன்றிருப்பவர் விக்டோரியா நுலண்ட் அம்மையார். அது போல றொபேர்ட் ஓ பிளேக் இருந்த பதவி நிலையில் இன்று இருப்பவர் டொனால்ட் லு.

இந்த இருவரும் இன்று முதல் 23ஆம் திகதி வரை பங்களாதேஷ், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் பயணம் செய்யவிருக்கின்றனர்.

2012இல் இலங்கை தொடர்பில் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் கொள்கை முடிவை எடுத்து அதை வெளிப்படுத்திய அமெரிக்கா, இப்போது பொறுப்புக்கூறலுடன் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஏதேனும் முக்கிய தீர்மானத்தை எடுத்து அதை வலியுறுத்தும் கொள்கை முடிவை இந்த இலங்கை விஜயத்தில் ஈடுபடும் தனது குழு மூலம் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழர்களின் சட்ட ரீதியான அபிலாஷைகளை நிறைவு செய்யும் – நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய – தீர்வு ஒன்றின் வாய்ப்புக் குறித்தே கடந்த நவம்பரில் வொஷிங்டனில் தமிழர் தரப்புடன் நடத்திய பேச்சுக்களில் அமெரிக்கத் தரப்பு அதிக ஈடுபாடு காட்டியது என்பதால் அதனடிப்படையிலான கொள்கைத் தீர்மானம் ஒன்றை அமெரிக்க மேற்கொண்டிருக்கும் எனத் தாம் நம்புகின்றார் என்று, அமெரிக்காவுடனான அந்தப் பேச்சுக்களில் உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பேரவையின் இயக்குநர் பவன் பவகுகன் தெரிவித்தார்.

தீர்வுக்கான வலியுறுத்தலில் கொழும்பை நெட்டித் தள்ளும் தந்திரோபாயத்தில் புதுடில்லியுடன் வொஷிங்டனும் இணைந்து கொண்டுள்ளது என்ற உறுதியான – உத்தியோகபூர்வ – நிலைமையைக் கொழும்பு இந்தக் குழுவின் விஜயத்தின் போது நன்கு உணர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியுள்ளது என்றும் –

அதன் பிரதிபலிப்பை, இந்த அமெரிக்க குழு கொழும்பு வந்து திரும்பிய பின்னர் – வரும் 25ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி கோட்டாபய – தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பில் உணரக் கூடியதாக இருக்கும் என்றும் –

சில இராஜதந்திர வட்டாரங்கள் கோடி காட்டின. அது உண்மையா என்பதை அடுத்த ஒரு வாரத்தில் நாம் அறியக் கூடியதாக இருக்கும் என்று நம்பலாம்.

அதுவரைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல் –

---

## கைதான ஆறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணைக்குஉடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

குற்றப்பத்திரத்தில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டமை மற்றும் கைது செய்யும் வேளையும் வலைகளை தொடக்கறுத்து வைத்திருக்காமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் நீரியல்வளத் துறையினரால் முன்வைக்கப்பட்டன.

இரு குற்றங்களுக்கும் தலா ஆறு மாத சாதாரண சிறைத்தண்டனையை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து நீதிவான் உத்தரவிட்டார்.

---

## ஒன்பது மாதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நண்பகல் நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர் குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் எரிபொருள் வரிசையை முடிவுக்குக் கொண்டு வருவோம், இந்தியாவுக்கு வழங்கப்பட்ட எண்ணெய்க்





குதங்கள் மற்றும் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்ட யுகதனவி ஆகியவற்றை மீளப் பெறுவோம் உள்ளிட்ட கோரிக்கைககளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக கொழும்பின் பல பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

இதற்கமைய தொழிநுட்பக் கல்லூரி சந்தி, மருதானை முதல் கோட்டை வரையிலான வீதி உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டது.

அத்துடன், தொழிநுட்பக் கல்லூரி சந்தி முதல் காலிமுகத்திடல் வரை நடைபவனியாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதிசெயலகத்துக்குள்உள்நுழைய முற்பட்ட நிலையில் குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# சபரிமலை

# ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.

No. 315, Kandy Road, Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மார்ச் மாதப் பரிந்துரைகள்

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிப்பீடத்தைப் பொறுத்தவரை இந்த மார்ச் மாதம் மிக முக்கிய காலமாகக் கடந்து செல்லவிருக்கின்றது.

இலங்கைத் தீவு, ஒரு நாடாகத் தப்பிப் பிழைப்பதற்கு இரண்டு முக்கிய துறைகளில், இரண்டு முக்கிய தரப்புகள் விசேடமான ஆலோசனை வழங்கும் காலமாக இது கடந்து செல்கின்றது.

நாட்டின், சமூக – அரசியல் பிணியிலிருந்து அதை விடுவிப்பதற்கான சர்வரோக நிவாரணியாக நல்லிணக்கம் என்ற மருந்தை பரிந்துரையாக வைப்பதுடன் ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டம் முடிவுறுகின்றது.

அதேசமயம், பொருளாதார நெருக்குவாரம் என்ற மீளாப் பிணியிலிருந்து விடுதலையாவதற்கான வழிமுறைகள், ஆலோசனைகள் போன்றவற்றை சர்வதேச நாணய நிதியம் வழங்கிச் செல்கின்றது.

இந்த மார்ச் மாதத்தில் சர்வதேச மட்டத்தில் இருந்து – கௌரவம் மிக்க உயர் தரப்புகளினால் – வழங்கப்பட்ட இந்த ஆலோசனைகளை செவிமடுத்து, உள்வாங்கி, தன்னை நெறிப்படுத்திக் கொள்வதன் மூலம் இந்த நாட்டையும் மக்களையும் பாதிப்புகளில் இருந்து மீட்பதில் கோட்டா அரசு நேர்மையாக நடந்து கொள்ளுமா என்பது சந்தேகமே.

பொருளாதாரத் துறையில் நாடு சீர்படுவதற்கு ஒரு சுயாதீனமான மத்திய வங்கி அவசியம். அது தொலைந்து போனமைதான் இலங்கையின் இன்றைய அவல நிலைக்குப் பிரதான காரணம்.

ஆட்சியாளர்களின் விருப்புக்கும் இழுப்புக்கும் ஏற்ப ஆடும் மத்திய வங்கியினால் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த முடியாது. கணக்காளராக இருந்து அரசியல்வாதியாக மாறிய அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக கடந்த செப்ரெம்பரில் நியமனமான காலம் தொட்டே அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுக்கான களமாக மத்திய வங்கி மாறிவிட்டது. அதன் செயற்பாடுகள் எல்லாம் கரவு மிகுந்தவையாக அமைந்து விட்டன.

அரசின் விருப்புக்கேற்ப பண நோட்டுக்களைக் கண்மூடித்தனமாக அச்சிட்டுப் புழக்கத்துக்குத் தள்ளியது மத்திய வங்கி. வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபாவின் பெறுமதி செயற்கையாக உயர்நிலையில் வலிந்து பேணப்பட்டது. எகிறிய பண வீக்கம் பற்றிய தகவல்கள் மூடி மறைக்கப்பட்டன. சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றும் பெயரில் புதிது புதிதாகக் கடன்கள் வாங்கப்பட்டு, நாட்டின் மீதான சுமை கண்மண் தெரியாமல் அதிகரிக்கப்பட்டது. கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக நட்பு நாடுகளின் அவசரசால உதவிகள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. பல்லாயிரம் கோடி ரூபாவை விழுங்கும் அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல் என்ற பெயரில் நாட்டின் பெருவளம் ஒரு துறையில் கொட்டி நாடு குட்டிச்சுவராக்கப்பட்டது.

இன்று எரிபொருளே இல்லாததால் வாகனங்கள் தரிப்பிடங்களில் முடங்கிக் கிடக்க, அரசோ வெளிநாடுகளிடம் அதிக வட்டி வீதத்தில் பெறப்பட்ட கடன் நிதியில் அதிவேக நெடுஞ்சாலைகளைப் புதிதாக அமைத்துக் கொண்டிருக்கின்றது.

இப்படி மூளைக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத காரியங்களை பொருளாதாரத் துறையில் செய்து கொண்டிருப்பது போன்ற பாணியைத்தான், சமூக – அரசியல் துறை தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதிலும் அரசு பின் பற்றிக் கொண்டிருக்கின்றது.

பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிச் சிந்தனையில் மூழ்கிக் கிடக்கும் கோட்டா ஆட்சிப் பீடத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் காட்டும் வழிமுறைகள், நெறிமுறைகள் சிந்தனையில் ஏறா. அது போலவே, சர்வதேச நாணய நிதியத்தின் நியாயமான பரிந்துரைகளும் புரியுமா என்பதும் சந்தேகமே.

## இலங்கையில் தலைதூக்கும் சீனாவின் ஆதிக்கம் அதிகாரப் பகிர்வைக் கோரக் காரணம் இதுதான்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



வடக்கு – கிழக்கு பகுதிகளில் சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் செல்வதை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கேள்வி இலங்கையில் சீனாவின் ஆதிக்கப் பங்கை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள வரலாற்று உறவை இது சீர்குலைக்குமா?

பதில்: இலங்கை நீண்ட காலமாக சீனாவுடன் நெருங்கிச் செயற்படுகின்றது. நாங்கள் அதை எதிர்த்துள்ளோம். நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு ஏற்கனவே சீனாவின் கைகளில் உள்ளது. ஆனால் வடக்கையும் கிழக்கையும் சீனாவின் கட்டுப்பாட்டிற்குள் செல்வதை நாங்கள் கடுமையாக எதிர்த்துள்ளோம்.

சீனர்களை விரட்டியடிக்கும் வகையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதை இந்திய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என்பதற்கான மற்றொரு காரணம் இதுவாகும். இலங்கையுடன் சீனாவின் அதிகரித்து வரும் நட்பு உண்மையில் இந்தியாவுடனான நமது உறவை மேம்படுத்துகிறது.

ஒரு பெரிய மற்றும் அண்டை நட்பு நாடாக, இந்தியா இலங்கையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை, வெளிநாட்டு சக்திகள் இங்கு களமிறங்குவது தொடர்பாகக் கவலை கொண்டுள்ளது.

எனவே, தமிழ் மக்களுக்கு சுயராச்சியம் இருப்பதை உறுதி செய்வதற்கும், மற்ற வெளிநாட்டு சக்திகள் தலையீடு செய்து, செயல்முறையை சீர்குலைக்காமல் இருப்பதற்கும் நாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## ஒட்டுமொத்த வைத்தியசாலை கட்டமைப்பும் ஸ்தம்பிக்கலாம்!

### எச்சரிக்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நாட்டின் வைத்தியசாலைகளை மூடக்கூடிய அபாய நிலை உருவாகியுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர் டாக்டர் ரூக்ஸான் பெல்லன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மருந்துப் பொருள்கள், எரிவாயு மற்றும் எரிபொருள் என்பன கிடைக்காவிட்டால் வைத்தியசாலைகளை மூட நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைத்தியசாலைகளில் நிலவி வரும் இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்னும் ஓரிரு வாரங்களில் அரசாங்க வைத்தியசாலைகள் அனைத்தையும் மூட நேரிடலாம்.

மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்கள் வாகனங்களில் போக்குவரத்து செய்ய போதியளவு எரிபொருள் கிடைக்கப் பெறுவதில்லை. நோயாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உணவு சமைத்துக் கொள்ள எரிவாயு கிடைக்கவில்லை.

நோயாளர்களுக்கு வழங்க போதியளவு மருந்துகள் கிடையாது. இந்த நிலைமைகள் பூதாகாரமாகும் வரையில் காத்திருக்காது விரைவில் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் ஒட்டுமொத்த வைத்தியசாலை கட்டமைப்பும் ஸ்தம்பிக்கும் நிலை உருவாகும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சுறுசுறுப்பாக செயற்பட்ட எம்.பிக்கள் வரிசையில் சாணக்கியனின் பெயரும்



கடந்த பெப்ரவரி மாதம் சுறுசுறுப்பாகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் முதல் ஐந்து இடத்துக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனும் தெரிவாகியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் நாடாளுமன்றத்தில் மிகவும் சுறுசுறுப்பாக செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரும் இதில் இடம்பிடித்துள்ளார்.

மந்திரி.எல்கே ஆல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, 2022 பெப்ரவரியில் நாடாளுமன்றத்தில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக பின்வருவோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அலி சப்ரி, லக்ஷ்மன் கிரியெல்ல, பந்துல குணவர்தன, சாணக்கியன் இராசமாணிக்கம் ஆகியோர் முதல் ஐந்து இடங்களுக்குள் தெரிவாகியுள்ளனர்.

## பிள்ளைகளை அழைக்க பாடசாலை சென்ற தாய் விபத்தில் பரிதாப சாவு!

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட விபத்து காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீசாலை வடக்கைச் சேர்ந்த 52 வயதான சிறீதரன் செல்வராணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் மீது ஓட்டோ மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

படுகாயம் அடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலையிலுள்ள பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்து வருவதற்காக சென்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்ற ஓட்டோ சாரதியை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓட்டோ தொடர்பான தகவல் தெரிந்தால் தமக்கு தகவல் வழங்குமாறு சாவகச்சேரி பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

➢ **உங்களைப் பற்றிய அறிமுகம்**

நான் தர்மினி சுரேந்திரன். Evangeline Beauty Care| அழகுக்கலை நிலையத்தின் உரிமையாளர். எனக்கு பிறப்பிடம் யாழ்ப்பாணம். ஆனால் நான் தற்போது வசிப்பது திருகோணமலையில். சிறுவயதிலிருந்து க.பொ.த சாதரணதரம் வரையில் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தேன். அதற்கு பின்னர் க.பொ.த உயர்தரத்தை பூர்த்தி செய்தது திருமணம் செய்து கொண்டது எல்லாம் திருகோணமலையில் தான். அங்கு தான் என்னுடைய அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன்.

➢ **அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?**

நடனம், நடாகம் போன்ற கலைகளை எனக்கு சிறுவயதிலிருந்தே பிடிக்கும். அப்படி சிறுவயதிலிருந்து எனக்கு பிடித்த கலைகளிலும் மிகவும் பிடித்தது ஒப்பணைக்கலை தான். நடனம் , நாடகம் போன்றவற்றில் நான் பங்குபற்றும்போது

செயற்படவேண்டியிருக்கும். நேரம், காலமில்லாமல் உழைக்கவேண்டும். மணப்பெண்ணை அலங்காரப்படுத்த சில சமயங்களில் எந்நேரத்திலும் செல்ல வேண்டியிருக்கும். அப்படி செல்லும்போது அந்த நேரத்தில் குழந்தை,கணவர் என குடும்பத்தை கவனிக்கமுடியாமல் போகும். ஆகவே குடும்பத்தை கவனித்துகொண்டு இந்த வேலையையும் முன்னெடுத்து செய்வது எனக்கு ஒரு சவாலே. இருப்பினும் இதை வெளியிலிருந்து பார்ப்பவர்கள் நான் குடும்பத்தை கவனிக்காமல் நேரம் காலம் இல்லாது ஒப்பணைக்காக செல்கிறேன் என்று எதிர்மறையாக கருத்துக்கள் எழுப்புவார்கள். சிலர் தெரியாமல் பேசுகின்றனர். பலர் தெரிந்தே பேசுகின்றனர். இதெற்கெல்லாம் பதில் கூறி நம் காலத்தை தாழ்த்தாது கடமையில் கண்ணாய் இருக்க வேண்டும். ஆகவே கேள்வி கேட்கும் இந்த சமூகத்திற்கு மத்தியில் நான் சாதித்து காட்டவேண்டும் என்பதே என் எதிர்பார்ப்பு. எனக்கான சவாலும் கூட.



தர்மினி சுரேந்திரன்
உரிமையாளர்
~Evangeline Beauty Care| அழகுக்கலை நிறுவனம்

# ‘தெரியாமல் பேசுகின்றனர் சிலர். தெரிந்தே பேசுகின்றனர் பலர். இதற்கு பதில் கூறி காலத்தை தாழ்த்தாது கடமையில் கண்ணாய் இருக்கவேண்டும்”

**~Evangeline Beauty Care| அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் தர்மினி சுரேந்திரன் உடனான நேர்காணலிது.**

என்னை நானே அலங்காரப்படுத்துவேன். நேரம் மீதமிருக்கும் பட்சத்தில் என்னோடு பங்குபற்றும் சக நண்பர்களையும் அழகுபடுத்துவேன். பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்திலேயே அழகுக்கலையின் மேல் என்னை அறியாமலே ஆர்வம் வந்துவிட்டது. உயர்தரத்தை கற்று முடித்ததன் பின்னர் கணினிக்கல்வியை கற்று மேலதிகமாக விருப்பத்தோடு அழகுக்கலை கல்வியை கற்கஆரம்பித்தேன். அரசாங்கத்தின் சான்றிதழைப் பெறவேண்டுமென்று NVQ கற்கையை பூர்த்தி செய்து சான்றிதழையும் பெற்றுக்கொண்டேன். திருமணத்திற்கு முன்னர் எனது குடும்பத்தினர் இந்த தொழிலை நான் செய்வதற்கு என்னை பெரிதும் ஊக்குவித்தனர். திருமணத்திற்கு பின்னர் எனது கணவரும் அதேபோலவே என்னை ஊக்குவித்தார். இந்த ஊக்கம் தான் அழகுக்கலை மேல் நான் கொண்டுள்ள ஆர்வம் பலமடங்காக அதிகரிக்க காரணம்.

➢ **இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?**

அழகுக்கலைத்துறை என்பது போட்டி நிறைந்த உலகம். முகம் தெரிந்த நபரோ அல்லது தெரியாத நபரோ, யாராக இருந்தாலும் நமக்கான இடத்திற்காக அவர்களுடன் ஒவ்வொரு நிமிடமும் நாம் போட்டி போட்டுக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. நாம் ஒரு நிமிடம் தாமதித்தால் கூட அந்த வாய்ப்பு இன்னொருவருக்கு தட்டிச் சென்று விடும். ஆகவே அழகுக் கலைத்துறையில் 24 மணிநேரமும் நாம்

➢ **அழகுக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..**

அழகுக்கலைத்துறையில் வாய்ப்புகள் அதிகம் தான். வெவ்வேறு கலாசாரங்களைச் சேர்ந்த வெவ்வேறு பிரதேசங்களில் திருமணங்களில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஆகையால் இதனை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மணப்பெண் அலங்காரத்திற்காக வேறு பிரதேசங்களுக்கு சென்று ஒப்பணைகள் செய்வதற்கு அது பெரும் உதவியாக இருந்தது. அதுமட்டுமன்றி சமூக வலைத்தளங்களினூடாக எனக்கான ஒரு முத்திரையை பதித்து கொள்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது இதுபோன்ற ஓர்டர்களின் மூலம். அருந்ததியின் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்காரக்காட்சியில் நானும் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. நான் அழகுக்கலை நிபுணராக இருப்பதனால் மட்டும் தான் எனக்கு இதுபோன்ற வாய்ப்புகள் கிடைக்கின்றன.

சாதனையாக நான் பார்ப்பது எனக்கான ஒரு சுயதொழிலை நான் மேற்கொண்டு வருவதுதான். எனது ஒரு தேவைக்கோ அல்லது என் பெற்றோருக்கு உதவியாகவோ, கணவருக்கு ஆதரவாகவோ, என் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவோ என்னால் முடிந்ததை செய்யும் தைரியம் இப்போது எனக்கிருக்கிறது. என்னுடைய சுயதொழில் மூலம் நான் எனது சொந்த காலில் நிற்கின்றேன் என்பதே என் வெற்றிதான். அதுமட்டுமன்றி அழகுக்கலையில் டிப்ளோமா,மாஸ்டர் மற்றும் NVQ கற்கைகளை பூர்த்தி செய்து சான்றிதழ்களை பெற்றுள்ளேன். இன்னும் புது புது விடயங்கள் பலவற்றை கற்றுக்கொண்டு வெற்றி காண்பேன்.

➢ **சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.**

இங்கு கனவுகள் இல்லாமல் எவருமில்லை. எல்லோருக்குமே ஒரு கனவு இருக்கிறது. அப்படியென்றால் பெண்களுக்கு மட்டும் கனவுகள் இல்லையா?அந்த கனவுகள் நிறைவேறியதா எனும் கேள்விக்கு சிலர் தம்முடைய வெற்றியின் மூலம் பதிலளிக்கின்றனர். சிலர் அந்த கனவுகளை பூட்டிவைத்து அடுத்தவரின் கனவுகளை சுமந்துகொண்டு கைப்பாவைகளாக அவர்களுக்காவே தாம் சாதாரண வாழ்க்கை வாழ்கின்றனர். இவ்வாறு இல்லாமல் பெண்கள் அவர்களுக்கான கனவை நோக்கி பயணிக்க வேண்டும். விடாமுயற்சி, கடின உழைப்பு, தன்னம்பிக்கையோடு போராடினால் பெண்களின் கனவுகள் எல்லாம் ஓர் நாள் நனவாகும்!






காலைக்கதிர்
Kalaikkathir

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சமாதான யாத்திரை

இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையிலான சமாதான யாத்திரை வியாழக்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் இடம் பெற்றது.

அம்பாறை - நிந்தவூரில் ஆரம்பமான சமாதான யாத்திரை அக்கரைப்பற்று, திருக்கோவில் ஊடாக பொத்துவில் உகத்தை வரை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ, சிங்கள மக்களிடையே நல்லிணக்க சமாதானத்தை மேம்படுத்தும் நோக்கில் சமாதானத்துக்கும் சமூகப்பணிக்குமான அமைப்பு ஏற்பாடு செய்த யாத்திரை வியாழன் காலை அக்கரைப்பற்று நகரை வந்தடைந்து.

இந்த யாத்திரையில் கலந்து கொண்டவர்கள் 'நல்லிணக்கத்துக்காக ஒன்றிணைவோம்' எனும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து யாத்திரையைத் தொடர்ந்தனர். இதில் அம்பாறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு பிரதேச நல்லிணக்க குழுக்களைச் சேர்ந்த சுமார் 150 பேர் கலந்து கொண்டனர்.

இங்கு அமைப்பின் அம்பாறை மாவட்ட திட்டப்பணிப் பாளர் ரி.ராஜேந்திரன் மற்றும் அமைப்பின் அக்கரைப்பற்று இணைப்பாளர் ஏ.ஜி.ஏ.கபூர் மற்றும் உறுப்பினர் அசோக்கா ஆறுமுகம் உள்ளிட்டவர்கள் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

# எரிபொருள் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த சாரதிகள்!

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டி வீதியில் அமைந்துள்ள திருகோணமலை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமையான எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக டீசல் வழங்குமாறு கோரி சாரதிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்

குறித்த எரிபொருள் நிலையத்தில் வியாழக்கிழமை இரவு 7.45 மணியளவில் டீசல் நிரப்புவதற்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் தரித்துள்ள நிலையில் கான்களில் டீசல் நிரப்புவதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த சாரதிகளுக்கு கொள்கலன்களில் டீசல் வழங்க முடியாது என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் தெரிவித்ததை அடுத்து சாரதிகள் வீதிக்கு இறங்கி பிரதான வீதியை மறித்து டீசலை வழங்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதை அடுத்து திருகோணமலைத் தலைமையகப் பொலிஸாரின் தலையீட்டில் எரிபொருள் நிலைய முகாமையாளர் உடன் கலந்துரையாடி மீண்டும் டீசல் விநியோகம் செய்யப்பட்டது.

இருப்பினும் வீதியில் தொடர்ந்தும் வாகன நெரிசல் ஏற்பட்டதாகவும் டீசல் கொள்வனவு செய்ய வருபவர்களுக்கு ஒருவருக்கு ஒரு கானிகளில் மாத்திரமே டீசல் விநியோகிப்பதாகவும் வாகன சாரதிகள் தெரிவித்தனர்.

இருப்பினும் அந்த எரிபொருள் நிலையத்தில் மட்டுமல்லாது திருகோணமலை நகரில் பெரும்பாலான எரிபொருள் நிலையத்தில் நீண்ட வரிசையில் பெற்றோல் நிரப்புவதற்காகக் காத்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிய குப்பிளான் விஞ்ஞானி வியாழன் இயற்கை மரணம்

(ந.லோகதயாளன்)

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிய ஈழத்து விஞ்ஞானி வியாழக்கிழமை இயற்கை மரணம் எய்தினார்.

நாசாவில் நீண்ட காலம் கடமையாற்றி குப்பிளான் மண்ணுக்கும், ஈழ மண்ணுக்கும் பெருமை சேர்த்த தமிழ் விஞ்ஞானி கலாநிதி வைத்திலிங்கம் துரைசாமியே இவ்வாறு காலமானவராவார்.

கடந்த வியாழக்கிழமை காலமாகின்றபோது அவருக்கு 90 வயது. இவர் அமெரிக்காவில் காலமானார். 1968 ஆம் ஆண்டு நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் அப்பலோ-11 ஐ அனுப்புகின்ற குழுவில் அங்கம் வகித்த தமிழ் விஞ்ஞானியான வைத்திலிங்கம் துரைசாமி பிறந்து வளர்ந்த வீடு தற்போது குப்பிளான் சிவபூமி ஞான ஆச்சிரமமாக விளங்குகின்ற மையும் குறிப்பிடத்தக்கது.



## இலங்கைக்கு இந்தியா உதவியதற்கு மோடிக்கு நன்றி தெரிவித்தார் செந்தில்

இந்தியாவிடம் இருந்து, இலங்கைக்கு 100 கோடி டொலரை கடனாக பெறுவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமையின் மூலம், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சுமைகள் ஓரளவு குறையும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது. அதன் பிரகாரம் அதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது. இந்தநிலையில் இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள செந்தில் தொண்டமான் -

இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவும் நட்புறவின் காரணமாக இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இந்தியா உதவிகளை வழங்கி வருகிறது. எரிபொருள் கொள்வனவு, ஏனைய அத்தியாவசியப் பொருளாதார தேவைகளுக்கு இந்த நிதியை அரசாங்கம் பயன்படுத்தும்.

கடுமையான நெருக்கடியை சந்தித்துள்ள இந்தத் தருணத்தில் இலங்கைக்கு கைகொடுத்தமைக்காக இந்திய அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு கொழும்பில் நபர் பரிதாப சாவு!

கொழும்பு 2, பகுதியில் டவ்சன் வீதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டி கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) இரவு இடம்பெற்றுள்ளதுடன், கொலையுண்டவர் 50 வயதுடைய மொஹமட் சியாப்தீன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் கொம்பனி வீதியில் வசிப்பவர் என பொலிஸார் கூறியுள்ளனர். தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## கலாசார நிதியத்தின் நோக்கங்களுக்கு புறம்பாக பணம் செலவழிக்கப்பட்டுள்ளது

### விதுர விக்ரமநாயக்க சுட்டிக்காட்டு

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கலாசார நிதியத்தின் நோக்கங்களுக்குப் புறம்பாக அந்த நிதியத்தின் பணத்தை பயன்படுத்தியதன் காரணமாக கலாசார நிதியத்தின் அடிப்படைப் பணிகளுக்கு நிதி இல்லை என தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

'ஒரே நாடு; ஒரே சட்டத்துக்கான' ஜனாதிபதிசெயலணியின் உறுப்பினர்கள் அண்மையில் தேசிய மரபுரிமைகள், அரங்கு கலை மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய பாரம்பரியம் மற்றும் தொல்பொருள்களைப் பாதுகாப்பது தொடர்பான சட்டம், அனைத்து இன மக்களுக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப் படாமை தொடர்பில் பல்வேறு மாகாணங்களில் உள்ள பொது மக்கள் இந்தச் செயலணிக்கு தகவல்களை வழங்கியுள்ளனர் என இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி முன்னெடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டிய இராஜாங்க அமைச்சர், தொல்பொருள் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும், அந்த இடங்களைப் பாதுகாப்பதற்கும் போதிய நிதி ஒதுக்கீடுகள் இல்லை என்றும், இந்த நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மத்திய கலாசார நிதியத்தின்நிலையான சேமிப்புகளில் முதலீடு செய்த 2 ஆயிரத்து 500 கோடி ரூபாக்களை கடந்த அரசாங்கத்தின் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் அடிப்படை நோக்கங்களுக்குப் புறம்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமை தெரியவந்துள்ளது.

'நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி என்பது சமமாகப் பெற்றுக்கொள்ளப் படவேண்டிய உரிமையாகும். அந்த பொதுக் கல்வியில் அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்குத் தடையாக இருக்கின்ற தீவிரவாதப் போதனைகள் ஊக்குவிக்கப்படக்கூடாது'. செயலணியின் உறுப்பினர்கள் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி. பெரேராவைச் சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இலங்கையில் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற கருத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு, அந்தக் கருத்தியலை ஆய்வு செய்ததன் பின்னர் நாட்டில் அதனை அமுல்படுத்துவதற்காக கருத்தியல் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வண. கலகொடஅத்தே ஞானசார தேரரின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி, தற்போது நாட்டின் பல்வேறு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில், பொது மக்களின் கருத்துக்களையும் நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்று வருகின்றது.

# ஜனாதிபதி பதவி விலகினாலும் தேர்தலுக்கு செல்லமுடியாது!

## அரசாங்கம் விளக்கம்

ஜனாதிபதி, நாளைய தினமே பதவியை விட்டு வெளியேறினாலும், நாடு ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல முடியாது.

மாறாக ஜனாதிபதி ஒருவரை நாடாளுமன்றம் நியமிக்க முடியும் என்று சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் கூட, எந்த நேரத்திலும் அரசாங்கத்தை கலைக்கும் அதிகாரம் அவருக்கு இருக்காது எனவும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே, அதிகார மாற்றம் கோரி கூச்சல் போடுவதில் பயன் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மரணத்தின் பின்னர் தேர்தல் நடத்தப்படவில்லை,

ஜனாதிபதி நியமிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, நாடாளுமன்றம் டி.பி.விஜேதுங்கவுக்கு ஆதரவாக வாக்களித்தது, இதன் பின்னரே அவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி ஆட்சியைப் பிடிக்க ஒரு காலம் இருக்கிறது.

மாறாக ஆட்சியை மாற்றி புதிய ஆட்சியை கைப்பற்றுவது நடைமுறை சாத்தியம் இல்லை என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** அடிக்கடி இணையத்துள் பயணிப்பதாகத் தெரிகிறது. அதில் வரும் ‘மீம்ஸ்’களைப் படிப்பதுண்டா? அவை பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன? முடிந்தால் அண்மையில் படித்துப் பிடித்த ஒரு ‘மீம்ஸ்’ பற்றிச் சொல்லுங்களேன்.

**பதில் :-** ஆற்றலும், சிந்தனையும் நம் இளையோர் மத்தியில் கூர்மையுற்று நிற்பதன் அடையாளமாகத்தான் முகநூலில் வெளிவரும் ‘மீம்ஸ்களைப்’ பார்க்கிறேன். வெற்றுக் கவிதைகள் எழுதும் கவிஞர்கள் போல, பலர் வெறுமனே ஒன்றுமில்லாத ‘மீம்ஸ்கள்’ பலவற்றையும் எழுதி வருகின்றனர். ஆனால் ஒரு சிலரின் ‘மீம்ஸ்கள்’ அற்புதமாய் அமைந்து நம்மை ஆழச் சிந்திக்க வைக்கின்றன.

கடந்த வாரம் ஜீவானந்த் வேலாயுத பிள்ளை என்றவரின் பெயரோடு வெளிவந்திருந்த ஒரு மீம்ஸினைப் பார்த்து வியந்தேன். அது அவரே எழுதியதா? அல்லது வேறெவரும் பதிவிட்டதை அவர் மீள்பதிவு செய்திருந்தாரா? என்பது தெரியவில்லை.

வரவர இன்றைய நமது சமுதாயத்தில், தன்னடக்கத்திற்கு இடமில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. ‘அலம்பல்’ பண்ணுகிறவர்களுக்குத்தான் இன்றைய நம் சமூகத்தில் அதிகம் மவுசு! மயிரளவாய்ச் செயல்கள் செய்துவிட்டுப் பின் அதுபற்றி மலையளவாய்த் தம்பட்டம் அடித்துக் கொண்டால், அந்தப் ‘புழுகை’ உண்மையென நம்பி மதிக்க இன்றைக்குப் பலர் தயாராயிருக்கின்றனர். ஆற்றலோடு சாதனைகள் பல செய்தும் தன்னடக்கத்தோடு இருக்கிறவனை நம் சமுதாயம் இப்போதெல்லாம் கவனிப்பதேயில்லை. இதனால் உண்மை ஆற்றலாளர்கள் மனம் நொந்து போகிறார்கள். பொய்யர்கள் புகழ் கொண்டு நிற்கிறார்கள்.

இந்த யதார்த்தச் செய்தியை, தன்னடகத்தோடு இருந்து மனம் நொந்துபோன யாரோ ஒரு ஆற்றலாளன் தன் மனவேதனையை ஒரு ‘மீம்ஸ்’ மூலம் வெளியிட்டிருந்தார். அற்புதமான ஒரு கவிதைத் தகுதியுடன் அந்த ‘மீம்ஸ்’ அமைந்திருந்தது. சமுதாயத்தில் நடக்கும் ஓர் உண்மை, அந்த உண்மையை உணர்த்தும் அற்புதமான ஓர் உவமை என அவர் அமைத்திருந்த தத்துவார்த்தமான அந்த ‘மீம்ஸ்’ இன்றைய கவிஞர்கள் பலர் எழுதும் கவிதைகளைவிடத் திறமாக இருந்தது. விளக்கங்களை விட்டுவிட்டு அந்த ‘மீம்ஸைச்’ சொல்லுங்கள் என்கிறீர்களா? இதோஅந்த ‘மீம்ஸ்’,

‘இப்போதெல்லாம் அடக்கத்தைவிட,
ஆரவாரத்திற்கே அதிக மரியாதை,
சத்தமின்றி இருந்தால் சமுத்திரத்தைக் கூட,
குட்டை என்று சொல்லும் உலகம் இது.’

– எழுதியவருக்கு என் பாராட்டுக்கள்.



**உலகநாதரின் ஒப்பீனியன் * சூசூசூப்பர்...! இறந்த காலப் பழம் பண்டிதர் நிகழ்காலத்திலும் பயணிக்கிறாருங்கோ....!**

**2. கேள்வி:-** ரஷ்யா, உக்ரைன் யுத்தம் நாளுக்குநாள் உக்கிரமடைந்து கொண்டு போகிறதே. மூன்றாம் உலக யுத்தம் வந்துவிடுமோ?

**பதில் :-** உலக யுத்தம் வரப்போகிறதோ இல்லையோ உலகின் அரசியல் ஒழுங்கில் மாற்றங்கள் நிகழப்போவது மட்டும் நிச்சயம். சோவியத்யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு, ‘தனிக்காட்டு ராசாவாக’ உலகநாடுகளை அச்சுறுத்தி ஆண்டு வந்த அமெரிக்காவுக்கு, உக்ரைன் யுத்தத்தின் மூலம் அசைக்க முடியாத ‘செக்’ வைத்துவிட்டார் புட்டின். இதுநாள் வரை வேறு மாற்றில்லாத அமெரிக்காவின் வலிமைக்கு அஞ்சி, விருப்பமில்லாமலும் அதன் முடிவுகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்த நாடுகள் பல, இனி வலிமையோடு அமெரிக்காவை எதிர்க்கத் தயாராகிவிட்ட, ரஷ்யாவின் பின்னால் அணிசேரப் போகின்றன. பழையபடி வல்லரசுகளின் போட்டிக்களமாக உலகம் மாறப் போகிறது. 1991 இன் முன் இருந்த உலகக் கட்டமைப்பு மீண்டும் உருவாகப் போகிறது. இப்பெரிய வல்லரசுகளின் பின்னால் உலகநாடுகள் அணிபிரிந்து நிற்கப் போகின்றன. இதுநாள் வரையும் கேட்பாரின்றி உலகத்தை ஆட்டிப்படைத்த அமெரிக்க, ஐரோப்பிய ‘ஜமீந்தார்கள்’ தமக்கு ‘சறுக்குக்கட்டை’ போடப்படும் இம் மாற்றத்தை ஏற்க முடியாமல் சங்கடப் படப் போகிறார்கள்.

ரஷ்யாதம்மைஎதிர்க்கும்அளவிற்கான வலிமை பெற்று வருவதை அறிந்தே, உக்ரைனின் மூலம் அதன் ஆற்றலுக்கு இவர்கள் வரம்பு கட்ட முனைந்தார்கள். அதன் விளைவுதான் அவசரப்பட்டு உக்ரேனுக்கு ‘வால்முறுக்கப்போன’ நிகழ்ச்சி. ஆனால் ரஷ்யா முந்திக் கொண்டுவிட்டது. இன்று ரஷ்யா துணிந்து தனது வலிமையைக் காட்டத் தொடங்கியதும் உக்ரைனுக்குள் நுழைய முடியாமலும் வெளியே நிற்க முடியாமலும் ‘இருதலைக் கொள்ளி எறும்பாக’ அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் படும்பாடு வேடிக்கையானது.



பல நாள்களாய் மற்றைய நாடுகளை அடக்கி ஆண்டு பழகிய அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குத் தம் சுதந்திரத்திற்கு ரஷ்யா இடப்போகும் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்வது சிரமமாய் இருக்கப் போகிறது. ஆகவே அவை ஒரு கட்டத்தில் ஒன்றிணைந்து, துணிந்து உக்ரைனுக்குள் புகுந்து உலக யுத்தத்தை ஆரம்பித்து வைக்கவேண்டும். அல்லது, இதுநாள் வரை தம் இஷ்டத்திற்கு அகட்டிக் கிடந்த கை, கால்களைச் சற்று ஒடுக்கிக் கொண்டு இயங்கப் பழகவேண்டும். இவ்விரண்டினைத் தவிர அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

இவற்றுள் எது சாத்தியம் என்பது பற்றித்தான் இப்பொழுது அந்நாடுகள் ரகசியமாய் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. ரஷ்யாவிடம் இருக்கும் ஆயிரத்து அறுநூறுக்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் பற்றி அந்நாடுகள் உள்ளூர அஞ்சத் தொடங்கியிருக்கின்றன. அவை வெளிப்படப் பேசிவரும் உக்ரைனின் இறையாண்மை, அங்கு நிகழும் மனித அவலம் என்பவை எல்லாம் உலகத்தைத் தமக்குப் பின்னால் திரட்டும் முயற்சிதான். அவர்கள் ரஷ்யாவின் மேல் விதித்த தடைகளெல்லாம் கூட, தான் பெற்ற வரத்தால் தன் தலையில் கைவைத்துச் சாம்பலாய்ப் போன, ‘பஸ்மாசுரனின்’ கதையாகி, அவரவர் நாட்டுக்கே இடையூறாகி வருவதை, அரசியல் அவதானிகள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ரஷ்யாவும், புடினும் இரண்டில் ஒன்று பார்ப்பது என முடிவு செய்துவிட்டதாய்த் தான் தெரிகிறது. இந்நிலையில் உலகின் கதி என்னாகப் போகிறதோ என்பதை, இனி விதி தான் தீர்மானிக்கவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அட நம்ம வாரிதி உலக அரசியலிலும் வெளுத்து வாங்கிறாருங்கோவ்...**

**3. கேள்வி:-** அரசு எல்லாவிதத்திலும் வலுவிழந்து நிற்கும் இன்றைய நிலையில், கூட்டமைப்பினரை அது பேச அழைப்பதும் அவர்களும் அவ் அழைப்பையேற்றுப் பேசச் செல்வதும் சரிதானா?

**பதில் :-** பிழை என்று சொல்லத்தான் என் மனமும் விரும்புகிறது. ஆனால் அறிவு அதனைச் சொல்ல விடாமல் தடுக்கிறது. நம்மவரில் பலபேர் இன்றும், நம்முடைய இனம் சார்ந்த அரசியல் முடிவுகளை, குறித்த ஒரு கட்சியோ குறித்த ஒரு தலைவரோதான் எடுப்பதாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். (பிரபாகரனையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.) ஆனால் அது உண்மையில்லை.

உலக வல்லரசுகளின் வலிமை, பிராந்திய வல்லரசுகளின் வலிமை, பேரினங்களின் வலிமை என, உலகை நிர்வகிக்கும் வலிமைகள் பலவாய் வரிசைப்படுகின்றன. இவ் வலிமைகள் இறங்கு வரிசைப்படி தமக்குக் கீழுள்ள பலவீனப்பட்ட தலைமைகளைத் தம் இஷ்டத்திற்கேற்ப வளைக்கத் தவறுவதில்லை. இது உலகளாவி நடக்கும் ஓர் உண்மை.

இன்று நம் பிராந்தியத்தின் வல்லரசாய்க் கருதப்படும் இந்தியா கூட, பெரும்பான்மையான விடயங்களில் உலக வல்லரசுகளின் சொற்கேட்டே நடக்கவேண்டியிருக்கிறது. அதுபோலவே இப் பிராந்தியத்தில் இருக்கும் சிறு நாடுகளும் தம் விருப்பம் மீறி, பிராந்திய வல்லரசான இந்தியாவின் சொற்கேட்டே நடக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. இறையாண்மை கொண்ட இலங்கையின் கதியே அதுவென்றால், அதனுள் இருக்கும் சிறுபான்மையினரான தமிழர்களாகிய நம் கதியைக் கேட்கவும் வேண்டுமா? எல்லோருக்கும் ஒரு மேய்ப்பன் இருக்கிறான். அந்த வலிமையுள்ள மேய்ப்பனின் வழிப்படிதான் கீழே உள்ள ‘ஆடுகள்’ ஓடவேண்டியிருக்கிறது. இதுதான் உண்மை நிலைமை.

(08ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாபயவை சமூக ஊடகத்தில் விமர்சித்தமையால் ஊடகவியலாளரை பணியிலிருந்து நீக்கிய ரூபவாஹினி

ஜனாதிபதியை விமர்சித்து வெளியிடப்பட்ட சமூக ஊடகப் பதிவு தொடர்பில் தொலைக்காட்சி தொகுப்பாளர் ஒருவரின் பணியை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரமி நிலேப்னா ரணசிங்க எனற் தொகுப்பாளர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விமர்சிக்கும் பதிவொன்றைத்தனது தனிப்பட்ட முகநூலில் பகிர்ந்தமைக்காக தொலைக்காட்சி தொகுப்பாளரை இடைநீக்கம் செய்துள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொலைக்காட்சி தொகுப்பாளரின் இடைநிறுத்தம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதுவரை கருத்துத் தெரிவிக்க வில்லை.

எவ்வாறாயினும், பரமி நிலேப்னா ரணசிங்கவை பணி இடைநிறுத்தம் செய்ய இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் எடுத்த தீர்மானத்தை சுதந்திர ஊடக இயக்கம் கண்டித்துள்ளது.

இது கருத்து சுதந்திரம் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளரின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என அந்த இயக்கம் கூறியுள்ளது. இது இலங்கையில் ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் அப்பட்டமான முயற்சி என சுதந்திர ஊடக இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# பலசரக்கு ஏற்றுமதி மூலம் ஆகக் கூடிய வருமானம்!

பலசரக்கு ஏற்றுமதி மூலம் வரலாற்றில் சமீப காலத்தில் பெறப்பட்ட ஆகக் கூடிய வருமானத்தை இலங்கை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இதற்கு அமைவாக 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் பெறப்பட்ட வருமானம் 10 ஆயிரத்து 300 கோடி ரூபாக்களாகும். இதனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 41 வீத அதிகரிப்பாகும். இதில் ஆகக் கூடிய வருமானம் கறுவா மூலம் பெறப்பட்டுள்ளது.

18,814 மெற்றிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் பெறப்பட்ட வருமானம் 4 ஆயிரத்து 587 கோடியே 90 லட்சம் மில்லியன் ரூபா ஆகும். கடந்த வருடத்துடன் இதனை ஒப்பிடுகையில் 20 வீத அதிகரிப்புடன் மொத்த பலசரக்கு ஏற்றுமதி வருமானம் 45 வீதமாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க, மெக்சிக்கோ, பேரு ஆகிய நாடுகளுக்கு கறுவா கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மிளகு ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட வருமானம் 2 ஆயிரத்து 266 கோடியே 90 லட்சம் ரூபாவாகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 148.3 வீத அதிகரிப்பாகும். 15,959 மெற்றிக் தொன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் கறுவாவிற்கு பெறுமதி சேர்க்கப்பட்டு இவ்வாறு சர்வதேச சந்தையில் வெற்றிகொள்ளப்பட்டிருப்பதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் ஜனக்க லிந்தர தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதி செய்துள்ள மொத்த பலசரக்கு 62,981 மெற்றிக் தொன் ஆகும்.

# தேசிய சேமிப்பு வங்கியின் ஐம்பதாவது ஆண்டு விழா



யாழில் சிறப்புற நடந்தது

தேசிய சேமிப்பு வங்கியின் ஜம்பதாவது ஆண்டு விழா யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதான வங்கி கிளையில் கொண்டாடப் பட்டது.

புதன்கிழமை காலை 7 மணியளவில் சர்வமத அனுஷ்டானங்களுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் இலங்கை தேசியக் கொடி மற்றும் வங்கிக் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. இதன்போது நிகழ்வில் கலந்து கொண் டவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டமையுடன் ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா கலந்து கொண்டமையுடன் வங்கி முகாமையாளர், வங்கி உத்தியோகத்தர்கள், வங்கி ஓய்வு நிலை உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# பாட்டும் நானே?...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது, இலங்கை அரசியல் நீரோட்டத்தில் ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. ஆட்சிக்கு வந்ததும் சீனாவை வழிமொழிந்தே வாழ்ந்து விடலாம் என்று இப்போதைய ஆட்சியாளர்கள் நினைத்தார்கள். ஆரம்பத்தில் சீனாவும், இவர்களை வளர்த்து விடுமாப்போல் பாவனை செய்தது. ஆனால் இந்தியாவை விட்டு இலங்கை முற்றாகத் தம்வயப்பட மாட்டாது என்பதைச் சில சந்தர்ப்பங்களால் தெரிந்து கொண்ட சீனா, மெல்ல மெல்ல இலங்கையைக் கைவிடத் தொடங்கிவிட்டது. ‘அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட’ கதையாய்த் தூர இருக்கும் சீனாவை நம்பி, அருகில் இருக்கும் இந்தியாவை விட்டுவிலகத் தொடங்கிய நம் அரசு, இப்பொழுது மீண்டும் இந்தியாவின் காலடியில் விழவேண்டி வந்திருக்கிறது.

ஓடி விளையாடி வெல்ல நினைக்கிறவர்களை, நின்று விளையாடி வெல்கிற விடயத்தில், இந்தியா படு ‘கில்லாடி’ இப்போது தன் காலடியில் வீழ்ந்திருக்கும் இலங்கையைக் காப்பாற்றுமாப்போல் துணைகள் பல புரிந்துகொண்டு, தான் நினைத்த இடத்திற்கு இலங்கையைக் கொண்டுவர அது நினைக்கிறது. ‘புலிமுகச்சிலந்தியிடம்’ அகப்பட்ட பூச்சியின் கதைதான் இன்று நம் இலங்கையின் கதையும்.

தன் மாநிலமான தமிழ்நாட்டோடு தொப்புள்க்கொடி உறவு கொண்ட ஈழத்தமிழர்கள்தான், இலங்கையைக் கட்டுப்படுத்த இந்தியாவிற்குக் கிடைத்திருக்கும் துருப்புச் சீட்டு. எந்த நேரமும் அந்தத் துருப்புச் சீட்டை பயன்படுத்தி இலங்கைக்குள் நுழையலாம் என்ற நம்பிக்கையோடுதான் அன்று தொட்டு இன்றுவரை இந்தியா செயல்படுகிறது. தற்போது தன் காலில் வந்து வீழ்ந்திருக்கும் இலங்கையை, தன் தேவைக்கேற்ப வளைக்க முடியும் என்பதைத் தெரிந்து, ஈழத்தமிழினத்தாரின் பிரச்சினையையும் ஓரளவு நீக்க இந்தியா முயல்கிறது என்று நினைக்கிறேன்.

அதற்கு வாய்ப்பாகச் சூழ்நிலை அமைந்துபோக, ‘பல்லுப் பிடுங்கப்பட்டிருக்கும்’ இன்றைய இலங்கை அரசைக் கொண்டு, தான் முன்பு கொணர்ந்த 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாய் அமுல்படுத்தச் செய்யவேண்டும் என்பதுதான் இந்திய அரசின் இன்றைய திட்டம். அதனைத் தானே நேராகத் தலையிட்டுச் செய்வதாய்க் காட்டிக் கொள்ளாமல், இலங்கை அரசும் தமிழ்த் தலைவர்களும் பேசி அம் முடிவை எடுப்பதாய் உலகிற்குக் காட்டத்தான், இலங்கை அரசையும் தமிழ்த் தலைவர்களையும் பேச்சு மேடைக்கு உந்தித் தள்ளுகிறது இந்தியா.

இந் நிலையில் இலங்கை அரசோ, தமிழ்த் தலைவர்களோ விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன, இச்செயலுக்கு உடன்பட்டுத்தான் ஆகவேண்டும் என்பதுதான் யதார்த்தம். இந்தியாவுடன் முரண்பட்டுக்கொண்டு இலங்கை அரசால் இன்றைய நிலையில் ஏதும் செய்ய முடியாது. அதேபோல இந்தியாவுடன் முரண்பட்டுக் கொண்டு ஈழத்தமிழர்களால் என்றைக்குமே ஏதும் செய்ய முடியாது. இது யதார்த்தம். அதனால்த்தான் இவ்விரு சாராரும் பேசுவதைப் பிழை என்று என்னால் சொல்ல முடியவில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * "ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா’ ஹி..ஹி..**

# ‘சயனம் மறந்த பொழுதுகள்’ கவிதைத் தொகுப்பு வெளியீடு



பாரதி மைந்ததனின் ‘சயனம் மறந்த பொழுதுகள்’ கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா புதுக்குடியிருப்பு பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றிருந்தது.

மலர்ச்செண்டுகள் கொடுக்கப்பட்டு பங்கேற்பாளர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கப்பட்டமையுடன் இறை வாழ்த்து, மங்களவிளக்கேற்றல், வரவேற்புரை, சிறுமிகள் நடனம், விருந்தினர் உரை, வாழ்த்துரை என்பவற்றுடன் நூல் வெளியீடு இடம்பெற்றது. நூலின் ஆய்வுரையை லதா கந்தையா வழங்கியிருந்தார்.

பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் தலைவர் க. றாகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந்த் மற்றும் சிறப்பு அதிதியாக வவுனியா நகரசபை உறுப்பினர் சு.காண்டீபன், கிராம அலுவலகர் தி.உமாஜிதன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ரூ.கல்யாணி, திரைப்பட இயக்குநர் சுதர்சன் ரெட்ணம், பூநகரி அபிவிருத்தி உத்தியோகத்தர் நிவேதா நிவேதிகா மற்றும் கௌரவ அதிதியாக வவுனியா மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் பாஸ்கரன் கதீன், ஆசிரியர் சிவகரன், அழகுக்கலை நிபுணர் ஜெயவாணி, கவிஞர் ராதை குபேரன், கவிஞர் அபிவர்ணா மற்றும் விருந்தினர்களாக அரச மற்றும் அரசார்பற்ற உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பாரதி மைந்தனின் சயனம் மறந்த பொழுதுகள் கவிதை நூல் வெளியீட்டில் கக்கிரஸ் தாவரம் கிழமையில் ஒருநாள் தண்ணீர் ஊற்றி வளர்க்க கூடிய அழகுத்தாவரம் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும். (100)

# நீண்ட வரிசையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஏற்பாடு

## அமைச்சர் காமினி லொக்குகே திட்டவட்டம்



எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையை முடிவுக்கு கொண்டுவர எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதன் அடிப்படையில், கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோல் மற்றும் டீசல் ஒரு பவுஸர் வீதம் விநியோகிக்குமாறு அமைச்சர் காமினி லொக்குகே உத்தரவிட்டுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் நீண்ட வரிசையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.


உலக சந்தையில் எரிபொருள் விலைக்கு அமைய இலங்கையிலும் எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படுமா? என்று வினவியபோது அது தொடர்பாகப் பேச்சு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேநேரம் நாட்டில் எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்துவதற்காக விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியிருப்பதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பேச்சுக்கு உரிய சமயம் இதுதான்

## அடித்துக் கூறுகிறார் சித்தார்த்தன்



**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**அரசாங்கம் தற்போது பல வீனப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் பலப்பட் டுக் காணப்படுகிறோம். இவ்வா றானதொரு சந்தர்ப்பத்தில் ஜனா திபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளமையை சாதுரிய மாகப் பயன்படுத்த வேண்டியது எமது கடமை என புளொட் அமைப்பின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமாகிய தர் மலிங்கம் சித்தார்த்தன் தெரி வித்துள்ளார்.**

"ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து மூன்று வருடங்களை எட்டிவிட்ட நிலையில் தனக் கும் தன்னுடைய அரசாங்கத்துக்கும் சர்வதேச ரீதியாகவும் உள்ளூர் முறை யிலும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைச் சமாளிக்கவும் சர்வதேசத்தை ஏமாற்ற வும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை திடீரென பேச்சு அழைத்துள்ளார். இந்த சந்திப்பைத் தமிழ் தரப்பினர் பலர் விரும் பவில்லை. இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?" – என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக் கையில் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதி தானாக எங்களைப் பேச் சுக்கு அழைக்கவில்லை. சர்வதேசம் தொடர்ந்து கொடுத்துவரும் அழுத்தம், மனித உரிமை பேரவையின் மறைமுக மான அழுத்தங்கள், அறிக்கைகள் மற் றும் இந்தியத் தரப்பினரின் வலியுறுத்தல் காரணமாகவும் தற்போது நாட்டில் ஏற் பட்டிருக்கும் பொருளாதார மற்றும் ஆட்சி நெருக்கடி காரணமாகவே அதைச் சம நிலைப்படுத்த ஜனாதிபதி கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்துள்ளார்.

இது தவிர கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலத்தி லிருந்து சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித்தரும்படி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் மூலம் கோரிக்கை விட்டிருந்தார். அதுவுமன்றி அண்மையில் தமிழ் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் அனைவ ரும் இணைந்துஜனாதிபதிமாளிகைமுன்பாக காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று செய்திருந்தோம். அவ்வேளை யிலும் ஜனாதிபதியைச் சந்திக்கும் முயற்சியை மேற்கொண்டோம்.

இவ்வாறான சூழ்நிலைகளே கூட்ட மைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைக் கக் காரணங்களாகும். மிக நீண்ட காலத் துக்குப் பின்பு இலங்கை அரசாங்கத் துக்கு ஓர் ஆலோசனையை இந்தியா முன்வைத்திருந்தது. அது மிகவும் முக் கியம் வாய்ந்ததாகும்.

13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இலங்கை தமிழ் மக்களுடைய நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள். அதுவே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி என்பதை எடுத் துக் கூறியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் எந்த தீர் மானத்தையும் நிறைவேற்றமாட்டேன் என்று ஜனாதிபதி பிடிவாதம் பிடித்து வரு கிறார். இது சர்வதேச ரீதியாக எமக்கு சாத கமாகவுள்ளது. நாட்டினுடைய இன்றைய பொருளாதார, அரசியல் நெருக்கடி கள் எமக்கு சாதகமாகவுள்ளன.

ஜனாதிபதி எப்போது பலவீனப்பட்டுக் காணப்படுகிறாரோ அப்போதுதான் நாம் அவருடன் பேசமுடியும். அவர் தற்போது சகல வகையிலும் பலவீனப்பட்டுக் காணப்படுகிறார். குறிப்பாகப் பொருளா தார நெருக்கடிகளுடன் சேர்ந்து ஆட்சி யின் உள்ளக நெருக்கடிகள் அவரை கதி கலங்க வைத்துள்ளன. நாம் இப்போது பலப்பட்டு நிற்கின்றோம், அவர் பலவீனப் பட்டு நிற்கின்றார்.

இந்த சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்தவேண்டும். சர்வதேசமும், மறைமுகமாக மனிதவுரிமை பேரவை யும், இந்தியாவும் தமிழ் மக்களுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாணுங்கள் என்று அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிற நிலையில், நாம் ஜனாதிபதியுடன் பேச வில்லையாயின் அவர்கள் கொடுத்த அழுத்தத்துக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

எனவேதான் பேசவேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறோம். எது எவ்வாறு இருந்தபோதும் தமிழ் மக்களுடைய பிரச் சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமா யின் ஜனாதிபதியுடன் பேச வேண்டியது அவசியமானது. மக்களில் பலரும் சில தமிழ்க்கட்சிகளின் தலைவர்களும் இப் பேச்சை விரும்பவில்லை, விசனத்தைத் தெரிவித்து வருகிறார்கள் என்பதை ஏற் றுக்கொள்கிறேன்.

மக்களின் கருத்தில் நியாயம் இருக்கி றதென்பது உண்மையே. காரணம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதியோ அவருடைய அரசாங் கமோ ஆர்வம் காட்டவில்லை, உதாசீனம் செய்துவருகிறதென்பது உண்மையே.

இருந்தபோதிலும் தற்போது கூட்ட மைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத் துள்ளார் என்ற நிலையில் நாம் அதை புறக்கணிப்பது பொருத்தமான விடய மல்ல. அவருடன் பேசினால் மட்டுமே அவர் தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர் பில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக் கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு கூட்டமைப்பு தனது அடுத்த நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க முடியும்.

அண்மையில் இந்தியா சென்று திரும்பியுள்ள இலங்கையின் வெளி விவ கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஒரு செய் தியை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி க்கும் கூட்டமைப்புக்கு இடையிலான பேச்சு தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பாக இருக்கும் என்றார். எனவே எமது பிரச்சி னையை நாமே பேசித்தீர்ப்போம் என்ற வழிமுறைக்கு அரசாங்கம் வந்திருக்கிற தென்ற சமிக்ஞையை காட்டியுள்ளார். எனவே வாய்ப்பை பயன்படுத்திப் பார்ப் போம் எனவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

# அரசின் முடிவுக்கு ஐ.தே.க. வரவேற்பு



சர்வதேச நாணய நிதியத்தை நாடு வதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை எமது கட்சி வரவேற் கின்றது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசா ளரும் முன்னாள் அமைச்சரு மான வஜிர அபே வர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை யில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு, இன் றைக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன் னரே எமது கட்சி ஆலோசனை வழங் கியது. அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியது.

எனினும், நெருக்கடி உச்சம் பெற்ற பின்னரே, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெறும் முடிவை அரசு எடுத்துள்ளதும். இது காலம் கடந்த ஞானம். இருந்தாலும் தாமதித்தேனும் சிறந்த முடிவு எடுக்கப்பட்டதை வரவேற் கின்றோம் – என்றார்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தியும் அரசின் முடிவை வரவேற்றுள்ளது.

# நிலையான ஆட்சிக்கு முதலில் ஜனாதிபதித் தேர்தலே வேண்டும்

## பொன்சேகா எம்.பி. வலியுறுத்து



பொதுத்தேர்தல் அல்ல, முதலி ஜனா திபதித் தேர்தலே நடத் தப்பட வேண்டும். இதுவேஉறுதியானஆட்சிக்குவழிசமைக் கும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரி வித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, ஏன் ஜனாதிபதித் தேர்தலை முத லில் கோரியுள்ளார் என ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப்பதிலளிக்கயி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:–

பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு எமது கட்சி வெற்றி பெறும் பட்சத்தில், மற்று மொரு கட்சி உறுப்பினர் ஜனாதிபதியாக இருந்தால் அவர் தடையை ஏற்படுத் துவார். கடந்த ஆட்சியில் மைத்திரி செயற்பட்ட விதம் அனைவருக்கும் தெரி யும். எனவேதான் முதலில் ஜனாதிபதித் தேர்தலைக் கோருகின்றோம்.

எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கட்சிதான் தீர்மானிக்க வேண்டும். அதில் தலைவரும் ஆதிக்கம் செலுத்துவார். கட்சி எடுக்கும் முடிவை நாம் ஏற்போம். ஆனால், பொதுவேட்பா ளர் வெளியில் இருந்து வர முடியாது. எமது கட்சி வேட்பாளர், பொதுவேட்பாள ராகலாம் – என்றார்.

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூரைகள் தூக்கி வீசப்பட்டதோடு அருகில் நின்ற மரங்களும் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்தன.

இதன்போது பாரிய மரம் ஒன்றின் பெரும் கிளை முறிந்து ஓட்டோ ஒன்றின் மீது வீழ்ந்தமையால் அந்த ஓட்டோவும் பெரும் சேதம் அடைந்துள்ளது.

### பிரதமர் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார் .

அதன்படி நாவற்குழி, ஆரியகுளம், கந்தரோடை, நயினாதீவுப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை களில் பிரதமர் வழிபாடுகளில் ஈடுபடவுள் ளார்.

அதேவேளை, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தையும் பிரதமர் தரிசிக்கவுள் ளார்.

இதேவேளை, தென்மராட்சி – மட்டு வில் வண்ணத்திப் பாலத்துக்கு அருகில் உள்ள பொருளாதார மத்திய நிலையம் நாளை பிரதமரால் திறந்து வைக்கப்பட வுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலக ஏற்பாட்டில் இடம்பெறும் குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ கலந்துகொண்டு பொருளாதார மத் திய நிலையத்தையும், வர்த்தகத் தொகுதி களையும் திறந்துவைக்கவுள்ளார்.

மாவட்ட விவசாய உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக 30 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலைய தொகு திகள் மத்திய நிலையத்துடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலும் இவ்வாறான அபி விருத்திப் பணிகள் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

### நீர்த்தாங்கியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

வெலிமடை பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றின் நீர்த்தாங்கியில் இருந்து ஆண் ஒரு வரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றதகவலுக்கு அமைய, நேற்று குறித்த சடலம் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளது.

குறித்த உணவகத்தில் பணியாற்றிய நபர் ஒருவரே, குறித்த நீர்த்தாங்கியில் வீழ்ந்து உயிரிழந்தார் என்று விசாரணை களில் தெரியவந்துள்ளது.

அம்பகஸ்தோவ பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், நீண்டகாலமாக நோயொன் றால் பாதிக்கப்பட்டிருந்தவர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

### தாய்ப்பால் புரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், குழந்தை ஏற்கனவே உயிரி ழந்தமையை மருத்துவர்கள் உறுதிப் படுத்தியுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகு மார் மேற்கொண்டார்.

### இந்தியா வழங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதுடில்லிப் பயணத்தின்போது, இந்தி யாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடன் வசதிக்கான ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டது.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ,

இந்தியா எமக்குத் தொடர்ச்சியாக ஒத் துழைப்பு வழங்கி வருகின்றது. மருந்து, அத்தியாவசியப் பொருட்களுக்காக தற் போது கடன் வழங்கப்பட்டுள்ளது. மூன் றாண்டுகளுக்குப் பின்னர் இதனைத் திருப்ப வழங்க வேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசு மாறும்வரை ஒரு டொலர்கூட அனுப்போம் வெளிநாட்டில்வாழும் இலங்கையர் திட்டவட்டம்!

கொழும்பு, மார்ச் 19

நாட்டின் தற்போதை அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து நீக்கி விட்டு, மக்கள் சார்பான அரசாங்கம் நாட்டுக்குள் ஆட்சியமைக்கும் வரை ஒரு டொலர் பணத்தை கூட நாட்டுக்கு அனுப்புவதில்லை என முடிவு செய்துள்ளதாக மாற்றத்துக்கான வெளிநாடு வாழ் இலங்கையர்கள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்பு, ஆஸ்திரேலியா, இத்தாலி, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பு.

ஜனாதிபதி நாட்டுக்கு மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்குப் பதிலாக மற்றவர்கள் மீது குற்றத்தை சுமத்த மேற்கொண்ட முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக அந்த சங்கத்தின் ஒருங்கிணைப்புச் சபையின் உறுப்பினர் மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

முழு நாடும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, மக்கள் இயல்பு வாழ்க்கையைக் குறைந்த வசதிகளுடன் கூட கொண்டு நடத்த முடியாத சூழ்நிலையில், நாட்டின் ஜனாதிபதி இதனை விட பொறுப்புடன் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எமது அமைப்பின் நம்பிக்கை.

பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வது ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை ஏற்றுக்கொண்டு, இதற்கான அரசாங்கத்தின் தீர்வுகள் என்ன என்பதை நாட்டுக்கு கூறி இருக்க வேண்டும்.

இதனை விடுத்து மிக இலகுவாக சுற்றுலாப் பயணிகள், வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பு பணத்தில் நாட்டின் அந்நிய செலாவணி நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருதற்காக காத்திருப்பது நகைப்புக்குரிய விடயம்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தமை, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு பணத்தை அனுப்பாமை மற்றும் நாட்டு மக்கள் தமது பொறுப்புகளைத் தட்டிகழித்தமை போன்ற காரணங்களால், நாட்டின் தற்போதைய நெருக்கடி ஏற்படவில்லை.

வெளிநாடுகளில் இருந்து டொலர்களை அனுப்பிய தொழிலாளர்களின் குடும்பங்கள் கூட, எரிவாயு, எரிபொருள் வரிசைகளில் நிற்பதுடன் மின்சாரம் இன்றி இருளில் இருக்கின்றனர். – என்று தெரிவித்துள்ளார்.

# மக்களின் கோரிக்கையினை ஏற்று ஜனாதிபதி பதவி விலக வேண்டும்!

## சாணக்கியன் வலியுறுத்து

மக்களின் கோரிக்கைறை ஏற்று அரசியலுக்கு வந்ததாகக் கூறும் ஜனாதிபதி, மக் களின் கோரிக்கையை ஏற்றுப் பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக காலியில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் மிகவிசேடமாகச்சொன்னவிடயங்களைப் பார்த்தால், தன்னை மக்கள் ஜனாதிபதியாக வருமாறு விடுத்த அழைப்பை ஏற்றேதான் ஜனாதிபதியாக அரசியலுக்கு வந்ததாக அவர் சொல்லியிருந்தார்.

அது ஓர் அளவிற்கு தெற்கிலே இந்த மக்கள் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தமை உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் ஜனாதிபதி மக்களுடைய கோரிக்கைக்கு இணங் கவே அரசியலுக்கு வந்தார் என்று சொன்னால், இன்று மக்களுடைய கோரிக்கைக்கு இணங்கி அவர் பதவி துறந்து வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

இன்று அனைத்து பிரதேசங்களிலும் ‘ஹோ கோஷம் கோத்தா’ என்று சொல்லும் ஒரு நிலையில், அவர் மக்களினுடைய கருத்தைக் கேட்டு அரசியலுக்கு வந்தவர், மக்களுக்காக அரசியலுக்கு வந்தவர் என்று சொன்னால், இன்று மக்கள் என்ன கேட்கின்றார்கள் என பார்த்தால் அவரை வீட்டுக்குச் செல்லுமாறு கேட்கின்றனர்.

ஆகவே, அந்த அடிப்படையில் அவர் இன்று தனது பதவியினை இராஜினாமா செய்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. அதே போன்று சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார். இதனையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அத்துடன், அவரால் இந்த நாட்டை சிறந்த முறையிலே நடத்த முடியாது. இந்த நாட்டில் ஜனாதிபதியின் சுபீட்சமான நோக்கம் என எதுவும் கிடையாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கூலிக்கு ரூ. 50 ஆயிரம் பணம் கொடுத்து தந்தையைக் கொலை செய்வித்த தனயன்

## கரடியனாறுப் பகுதியில் அரங்கேறிய கொடூரம்

மட்டக்களப்பு – கரடியனாறு பிரதேசத்தில் தனது தந்தையை 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து கூலிக்கு ஆள் வைத்து கொலை செய்த 22 வயதுடைய மகன் உட்பட இருவரை நேற்று முன்தினம் தாம் கைது செய்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரலக்குளம் குடாவெட்டி வயல் பகுதியில் வேளாண்மைக் காவலுக்காக அமைக்கப்பட்ட கொட்டகை ஒன்றில் இருந்து வெட்டு காயங்களுடன் விவசாயியான 4 பிள்ளைகளின் தந்தையான பரசுராமன் ஆறுமுகம்( 54 வயது) என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

3 பெண் பிள்ளைகள் மற்றும் சிந்துஜன் என்ற 22 வயதுடைய ஒரு ஆண் பிள்ளையுமாக 4 பிள்ளைகளின் தந்தையான இவர் விவசாயம் மேற்கொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் 22 வயதுடைய மகன் மதுபாவனைக்கு அடிமையாகியுள்ளமையால் மதுபானம் வாங்கத் தந்தையிடம் பணம் கேட்பது மற்றும் மாட்டுப் பட்டியிலுள்ள மாடுகளைத் திருடி விற்பது போன்ற நடவடிக்கையால் தந்தைக்கும் மகனுக்கும் இடையே தொடர்ந்து தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனையடுத்து சிந்துஜன் தனது தந்தையைக் கொலை செய்ய திட்டமிட்டு கிரான் பகுதியைச் சேர்ந்த தனது நண்பனான இட்ணராஜா நிரோசன் என்பவனை கடந்த முதலாம் திகதி சந்தித்து, தனது தந்தையைக் கொலை செய்ய 50 ஆயிரம் ரூபா பணம் தருவதாக பேரம் பேசியுள்ளான்.

இதனைத் தொடர்ந்து அவனிடம் தொலைபேசியில் பலமுறை தொடர்பு கொண்டு தந்தையை கொலை செய்வது தொடர்பில் பேசி வந்துள்ளான். இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி பரசுராமன் வழமைபோன்று வேளாண்மைக் காவலுக்காக வயலில் உள்ள கொட்டகைக்கு தனிமையில் சென்று காவலில் ஈடுபட்டுள்ளார்.

பரசுராமன் தனிமையில் சென்றிருப்பதை அறிந்த கூலிக்கு கொலை செய்ய அமர்த்தப்பட்ட இட்ணராஜா நிரோசன் அந்த கொட்டகைக்கு சென்றுள்ளார். மகனின் நண்பனான நிரோசனை கண்ட பரசுராமன் அவனுடன் பேசிக் கொண்டு அவனுக்கும் இரவு உணவை கொடுத்து இருவரும் சேர்ந்து உணவு உண்டுள்ளனர்.

இதனையடுத்து இருவரும் உறங்கியுள்ள நிலையில் அதிகாலை 3.30 மணியளவில் கொலை செய்ய சென்றவன் கண்விழித்து பார்த்த போது பரசுராமன் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதை கண்டு அங்கிருந்த கல் ஒன்றை எடுத்து அவரின் தலையில் போட்ட போது அவர் உயிரிழக்காததையடுத்து அவன் கொண்டு சென்ற கத்தியால் கழுத்தை வெட்டியுள்ளான். அப்போதும் அவருக்கு உயிர் போகவில்லை.

அதனைத் தொடர்ந்து தனது இடுப்பிலுள்ள நாடா ஒன்றை எடுத்து அவரின் கழுத்தை சுற்றி இழுத்து நெரித்து அவரை கொலை செய்துள்ளான்.

பின்னர் அங்கிருந்து தப்பி அதிகாலை 4 மணியவில் தனது நண்பனுக்கு கையடக்க தொலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்தி ‘நீ சொன்ன மாதிரி உனது அப்பாவை கொலை செய்துள்ளேன்’ எனத் தெரிவித்து விட்டு வீட்டுக்குச் சென்றுள்ளான்.

எனவே பேரம் பேசியவாறு பணத்தை கொடுப்பதற்காக தனது நண்பனை தேடி கடந்த 14 ஆம் திகதி கிரான் பகுதிக்கு சென்று நகை ஒன்றை ஈடு வைத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை நண்பனிடம் வழங்கியுள்ளான் சிந்துஜன்.

பேரம் பேசிய பணத்தை பெற்ற நிரோசன் அங்கு ஏற்கனவே நகைகடை ஒன்றில் 23 ஆயிரம் ரூபாவுக்கு ஈடு வைத்த நகையை ஈட்டில் இருந்து மீட்டுக் கொண்டு அங்கிருந்து இருவரும் பிரிந்து சென்றுள்ளனர் எனக் கைது செய்யப்பட்ட இருவரிடம் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் நாடா, கல் என்பவற்றை மீட்டுள்ளனர் எனவும் இந்த கொலை தொடர்பாக முதலில் கொலை செய்யப்பட்டவரின் மகனை கைது செய்து, மேற்கொண்ட விசாரணையில் கொலையாளியைக் கைது செய்துள்ளதாகவும் இருவரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மூன்று தினங்களுக்கு மட்டுமே விடுவிக்கப்பட்ட எரிவாயு போதும்

கொழும்பு, மார்ச் 19

சில தினங்களுக்கு பின்னர் டொலர்களை வழங்கிய பின்னர் வியாழக்கிழமை 3 ஆயிரத்து 500 மெற்றி தொன் சமையல் எரிவாயும் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த தொகை சுமார் மூன்று தினங்களுக்கு மாத்திரமே போதுமானது என எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

லிட்ரோ எரிவாயு நிறுவனம் சுமார் 200 மெற்றி தொன் எரிவாயுவை தொழிற்சாலைகளுக்கு வழங்குகிறது. மீதமுள்ள எரிவாயு 12.5 கிலோ கிராம், 5 கிலோ கிராம் மற்றும் 2.5 கிலோ கிராம் கொள்கலன்களில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு தொன் எரிவாயு மூலம் 12.5 கிலோ கிராம் எடை கொண்ட 80 கொள்கலன்களை மாத்திரமே நிரப்ப முடியும். கொள்கலன்களின் அளவுக்கு அமைய ஒரு தொன் எரிவாயு நிரப்பபடும் கொள்கலன்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் எனவும் நிறுவனம் கூறியுள்ளது.

லிட்ரோ நிறுவனம் விநியோகித்துள்ள பல அளவுகளிலான 70 லட்சம் கொள்கலன்கள் விற்பனை முகவர்கள் மற்றும் மக்களிடம் உள்ளன. இவற்றில் 55 லட்சம் கொள்கலன்கள் 12.5 கிலோ கிராம் கொள்ளளவை கொண்டவை எனவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# இரு பஸ்கள் விபத்து அறுவர் படுகாயம்!

நமுனுகுல, மார்ச் 19

நமுனுகுல – பசறை பிரதான வீதியின் பத்தாம் கட்டைப் பகுதியில் இரு பஸ்கள் மோதி விபத்திற்கு உள்ளாகியுள்ளன.

விபத்தில் பஸ் சாரதி உட்பட அறுவர் காயங்களுடன் பசறை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

பண்டாரவளையிலிருந்து பசறை நோக்கி சென்ற தனியார் பயணிகள் பஸ்ஸும், பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த பாடசாலை சேவைபஸ்ஸும் மோதியே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்து தொடர்பாக பசறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பட்டினியால் வாடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளேன். மக்கள் திட்டுகின்றனர். காரணம், மக்கள் நெருக்கடியில் உள்ளனர்.

பட்டினியில் வாழ முடியாது. எனவே, ஜனாதிபதியைச் சந்தித்து இந்த நிலைமையைத் தெளிவுபடுத்தவுள்ளேன்.

பின்வரிசை எம்.பிக்கள் என்போர் அரச புகழ் பாடுபவர்கள் அல்லர். எனவே, ஜனாதிபதியால் காத்திரமான முடிவுகள் எடுக்கப்படாவிட்டால், நாங்கள் முடிவொன்றை எடுக்க நேரிடும். அரசுக்குக் ‘குட்பாய்’ சொல்லவும் தயங்கமாட்டோம் – என்றார் .